00102

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- மட்டம் 4

இறுதிப் பரீட்சை - 2023/2024

LLU 4806 – குற்றவியற் சட்டம்

காலம்: மூன்று மணித்தியாலங்கள்

**திகதி:** 18th மே 2025 **நேரம்:** 01.30 - 04.30pm

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)**

ஏதேனும் ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. கோட்பாட்டில், குற்றவியல் தவறின் குற்றச் செயல் (actus reus) மற்றும் குற்ற மணம் (mens rea) ஆகிய கூறுகள் வெவ்வேறு பணிகளைச் செய்கின்றன. குற்றச் செயல் (actus reus) என்பது ஒரு சமுதாயத்தின் நடத்தைக் கட்டுப்பாட்டு விதிகளை சுமாராக பிரதிபலிப்பதாகும் - இந்த விதிகள் நாம் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பதைச் சொல்கின்றன."

William Wilson, Criminal Law (1st edn,Addison Wesley Longman Ltd ,1998)p.65

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில், குற்றச் செயல் (actus reus) மற்றும் குற்ற மணம் (mens rea) என்ற கோட்பாடுகள், இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவியல் பொறுப்புக்களை நிறுவுவதில் எப்படி பயன்படுகின்றன என்பதை விவரிக்க.

உங்கள் விடையை தொடர்புடைய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்குச் சட்ட தீர்ப்புகளின் ஆதாரத்துடன் எடுத்துரைக்க.

**(20 புள்ளிகள்)**

2. நிமேஷ் என்ற முச்சக்கர வண்டி ஓட்டுநர், உணவக உரிமையாளர் ரமேஷுடன் நீடித்த முரண்பாட்டில் ஈடுபட்டிருந்தான். ஒரு நாள், நிமேஷ் தனது முச்சக்கர வண்டியை ரமேஷின் உணவகத்தின் முன் நுழைவாயிலை மறைக்கும் வகையில் நிறுத்தினான். இதனால் இருவருக்கும் கடுமையான வாதம் ஏற்பட்டது. அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்க ஆரம்பித்தனர். இந்த தாக்குதலின்போது, ரமேஷ் உணவகத்துக்குள் ஓடி சென்று ஒரு கத்தியை எடுத்து வந்து அருகில் இருந்த நிமேஷின் வயிற்றில் பல முறை குத்தினான். நிகழ்வை நேரடியாக கண்ட ஒருவர் நிமேஷை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார். எனினும், வைத்தியசாலையில் சேர்ப்பதில் தாமதம் ஏற்பட்டது மற்றும் மருத்துவர் காயங்களை சரியாக கண்டறியாமல், உரிய சிகிச்சையையும் பரிந்துரையையும் வழங்கவில்லை. இதன் விளைவாக நிமேஷ் உயிரிழந்தார். மரண விசாரணை வைத்தியர்கள், நிமேஷை உரிய காலத்துக்குள் மருத்துவமனையில் சேர்த்திருந்தால் மற்றும் உரிய சிகிச்சை அளித்திருந்தால், அவரது உயிரை காக்கமுடிந்திருக்குமென தெரிவித்தனர்.

இந்நிலையில், ரமேஷ் இலங்கைத் தண்டனைச் சட்டத்தின் கீழ் கொலைக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். ஆனால், அவரது தரப்பு வாதம், மருத்துவரின் கவனக்குறைவான முறையே மரணத்துக்கான உண்மையான காரணமாகும் என்பதாகும்.

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில், இலங்கை குற்றவியல் சட்டத்தின் கீழ் 'செயற் கோவை' (principle of causation) என்ற கோட்பாட்டைப் பொருட்படுத்தி விவாதிக்க.

தொடர்புடைய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்குச் சட்ட தீர்ப்புகளின் ஆதாரத்துடன் உங்கள் விடையை ஆதரிக்க.

(20 புள்ளிகள்)

3. சாட்சியம் என்பது, மற்றொரு உண்மை உள்ளதென்பதை மனதில் நம்பிக்கை ஏற்படுத்தும் உண்மைகளை குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல் ஆகும்.

மேற்கண்ட கூற்றின் அடிப்படையில், சாட்சியத்தின் விதிவகைகளை விளக்குக. தொடர்புடைய சட்டப்பிரிவுகள், நடைமுறை உதாரணங்கள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளுடன் உங்கள் விடையை ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

4. கயன் மற்றும் ரணவக்க பொரல்ல பகுதியில் மக்கள் கூட்டம் அதிகமுள்ள குடியிருப்பில் அயலவர்களாக வசித்து வந்தனர். பல நாட்களாக, கயனின் வீட்டிலிருந்து வரும் உயர் ஒலி இசை, சமீபத்தில் மூளை அறுவை சிகிச்சை மேற்கொண்டதும் தொடர்ச்சியாக இதய சிக்கல்களால் அவதிப்பட்டும் வந்த ரணவக்கவை தொந்தரவு செய்தது.

ஒருநாள், தனது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தபோது, ரணவக்க, அவ் ஒலி தன்னுடைய நோய் நிலையை மேலும் மோசமாக்குவதாக விளக்கி, கயனை இசையை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் ரணவக்கவின் நோய் நிலையை நன்கு அறிந்திருந்த கயன், அவரது கோரிக்கையை நிராகரித்தான். இதையடுத்து, இருவருக்கிடையே கடுமையான வாதம் ஏற்பட்டது. வாதத்தின் போதே, கயன் ஒரு கனமான மரக்கட்டையால் ரணவக்கவின் தலையில் அடித்ததும், பின்னர் அவனை வலிமையாக தள்ளியதும், ரணவக்காவின் தலையை சுவற்றில் மோதி காயம் ஏற்படக் காரணமானது.

ரணவக்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான், ஆனால் மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசியால் சற்று நேரத்தில் உயிரிழந்தான்.

மேற்கண்ட நிகழ்வினை கருத்திற் கொண்டு, இலங்கைத் தண்டனைச் சட்டத்தின்படி கயனின் கொலை தொடர்பான குற்றவியல் பொறுப்பை (criminal liability) பகுப்பாய்வு செய்க.

தொடர்புடைய சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்குத் தீர்ப்புகளை கொண்டு உங்கள் விடையை ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

5. "இலங்கை தண்டனைச் சட்டக் கோவையில் துன்புறுத்தல் (hurt) மற்றும் கடுங்காயம் (grievous hurt) ஆகியவை இடையிலான வேறுபாடு, உடல் காயங்களுடன் தொடர்புடைய வழக்குகளில் குற்றவியல் பொறுப்பு மற்றும் அதற்கான தண்டனையின் தீவிரத்தைக் காண்முறையில் மிக முக்கியமான பாத்திரம் வகிக்கிறது."

விவாதிக்க.

உங்கள் விடையை தண்டனைச் சட்டக் கோவையின் (Penal Code) தொடர்புடைய பிரிவுகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் ஆதரிக்க.

**(20 புள்ளிகள்)**

6. மேற்கண்டவற்றை பரிசீலிக்க.

(அ). சாமரா இருபத்தி ஐந்துடைய வேலையை இழந்தவன், அவன் வங்கியின் அருகே உள்ள ஏ.டி.எம் மெஷினில் நுழைந்து வருபவர்களை பல நாட்களாகக் கவனித்து வந்தான். அவன், மத்திய வயதுடைய பாடசாலை ஆசிரியரான இறேஷ், ஏ.டி.எம் மூலம் பணம் எடுத்ததைக் கவனித்தான். இறேஷ், பணத்தை தன் பணப்பையில் வைத்து, ஒரு டாக்ஸியை பிடிக்க சாலையில் நடக்கத்

தொடங்கினான். சாமரா, இறேஷை பின் தொடர்ந்தான். அவர்கள் தனிமையான பாதைக்கு திரும்பியவுடன், சாமரா பின்னால் இருந்து ஓடி வந்து இறேஷின் தலையில் துப்பாக்கியைச் சுட்டிக்காட்டி, அவரது பணப்பையை பறித்துக்கொண்டான்.

**(10 புள்ளிகள்)**

(ஆ) ஹேமந்தி மற்றும் நிலந்தி நண்பர்கள். அவர்கள் இருவரும் இணைந்து ஒரு சிறிய கேக் கடையை ஆரம்பிக்க முடிவு செய்தனர். இருவரும் தலா 50,000 ரூபாய் ஒப்பந்தமாகச் செலுத்த ஒப்பந்தமானார்கள். ஹேமந்திக்கு, இருவரின் பெயர்களிலும் கூட்டு வங்கிக்கணக்கொன்றைத் திறப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டது. எனினும், கணக்குத் திறப்பதில் ஏற்பட்ட தாமதத்தால், ஹேமந்தி தற்காலிகமாக அந்த கணக்கை தன் பெயரில் திறந்து வைத்தாள். அவள், ஒரு மாதத்திற்குப் பிறகு கூட்டு கணக்காக மாற்றுவதாக உறுதியளித்திருந்தாள்.

இரண்டாம் மாதம் கழிந்த பிறகும் நிலந்தி, அந்த கணக்கில் உள்ள நிலுவைப் பற்றிய தகவல்களைப் பெறவில்லை. அவள் கேட்ட போதும், ஹேமந்தி "எல்லாம் கட்டுப்பாட்டில் உள்ளது" என கூறி விவரங்களை கூற மறுத்தாள். பின்னர், நிலந்தி, ஹேமந்தி அந்த கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு, அதைத் தன் மகனின் பாடசாலை கட்டணமாக செலுத்தியிருப்பதை கண்டறிந்தாள்.

உங்கள் விடையை, தொடர்புடைய சட்டப் பிரிவுகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளுடன் ஆதரிக்க.

**(10 புள்ளிகள்)**

7. குற்றமற்றவராக விடுதலை செய்யப்படாமலிருந்தாலும், குற்றத்தீர்ப்புப் பெற்ற ஒருவருக்கு தண்டனைத் தீர்ப்பை குறைக்கும் வகையில் 'தணிக்கான வழக்குரை' (plea of mitigation) முன்வைக்க இயலும்" என்ற மேலுள்ள கூற்றை, இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 294 உடன் தொடர்புபடுத்தி விவாதிக்க.

**(20 புள்ளிகள்)**

8. பின்வனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு வரைக.

a. கடும் பொறுப்பு (Strict Liability)

b. வன்பறி (Extortion)

c. ஏற்கத்தகுந் தன்மை மற்றும் இயைபு (Admissibility and Relevancy)

d. பாலியல் வன்புணர்வு (Rape)

**(5 × 4 = 20 புள்ளிகள்)**

****பதிப்புரிமை பெற்றது.****